18.11.2025

O.S.No. 166/2021

PW1– கணேசன் – த/பெ. கடற்கரை நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 18.11.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( 6ம் பிரதிவாதி தரப்பில்)

1. தபசில் சொத்து தேவதாசனுக்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். அதற்கான பட்டா எண் ஞாபகம்இல்லை. தேவதாசனுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டதா அல்லது சுயார்ஜிதமாக பாத்தியப்பட்டதா என்றால் பூர்வீக சொத்து. தேவதாசனுக்கு பூர்வீக சொத்து என்பதை காட்டக்கூடிய ஆவணம் தாக்கல செய்துள்ளேனா என்றால் "A" ரிஜிஸ்டரை தாக்கல் செய்துள்ளேன். எனதுகிரைய ஆவணத்தில் வழக்குசொத்து தேவதாசனுக்கு பட்டாமூலம் பாத்தியப்பட்டது என குறிப்பிடப்படவில்லை என்றால் எனது கிரைய ஆவணத்தில் இல்லை.

2. வா.சா.ஆ.1ல் உள்ள முன்ஆவணம் வேறு சொத்திற்குரியது என்றால் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தை நான் அனுபவிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து ஆதியில் தேவதாசனுக்கு பாத்தியப்படவில்லை, வழக்குசொத்தினை விற்பனை செய்ய தேவதாசனுக்கு உரிமை கிடையாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை நான் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்தினை நான் அனுபவம் செய்வதற்கு தீர்வை ரசீது தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கீழ்புறமுள்ள சொத்தை 1 முதல் 5 பிரதிவாதிகள் என் மீது வழக்குதாக்கல்செய்து எனக்கு எதிராக தீர்ப்பு பெற்றார்கள் என்றால் சரிதான் ஆனால் கீழ்புறமுள்ள சொத்தானது எனது சொத்தே கிடையாது. மேற்படி தீர்ப்பிற்கு எதிராக மேல்முறையீடு செய்யப்பட்டு அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கீழ்புறமுள்ள சொத்து காலியிடமாக உள்ளது என்றால் காளவாசல் இருந்தது, தற்போது சாலை அமைத்துள்ளார்கள்.

4. வழக்கு சொத்திற்கு கீழ்புறமுள்ள சொத்தில் மின்கம்பம், தெருவிளக்கு, சாலை, பிற கட்டிடங்கள் உள்ளது என பிராதில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு கீழ்புறமுள்ள சொத்தினை பொறுத்து ஏற்கனவே நடைபெற்ற நிறைவேறுதல்மனு எண்.77/2012, 83/2016 ஆகியவைகள் எனக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டது, ஆனால் 6ம் பிரதிவாதிக்கு எதிராக தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

5. முன்வழக்கு 446/2006 இதே நீதிமன்றத்தில் நடைபெற்றது என்றால் சரிதான். மேற்படி பழைய வழக்கும், மேற்படி நிறைவேறுதல் மனுவும் வழக்கு சொத்திற்கு கீழ்புறமுள்ள சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கக்கூடாது என்பதற்காக தான் 7 முதல் 11 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினேன் என்றால் சரிதான். 10, 11 பிரதிவாதிகள் அரசு ஊழியர்கள் என்றால் சரிதான்.

6. 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கக்கூடாது என்பதற்காகதான் 7 முதல் 11 பிரதிவாதிகளை தேவையில்லாமல் தரப்பினர்களாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதி வழக்குசொத்தை கிரையம் வாங்கக்கூடாது என்பதற்காக தான் இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.

7. வழக்குசொத்தும் அதற்கு கீழ்புறமுள்ள சொத்தும் மொத்தம் 37 செண்ட், அதன் சர்வே எண்.149/20 என்றால் சரிதான். மேற்படி இடம் ரீசர்வேயின் போது வள்ளியம்மாள், மற்றொருவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். மேற்படி இடம் ரீசர்வேயின்போது தேவதாசன் பெயரோ, அவரது முன்னோர் பெயரோ இல்லை என்றால் மற்றொரு பெயர் தேவதாசன் முன்னோர் ஆவார். மேற்படி சங்கதிகளை என்னுடைய பிராதிலோ, ஆவணத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான், "அ" பதிவேட்டில்தான் உள்ளது.

8. மேற்படி சொத்தை வள்ளியம்மாள் அனுபவம் செய்துவந்தார் என்றால் சரியல்ல. வள்ளியம்மாள் கணவர் பெயர் சங்கரப்பாண்டியன் என்றால் எனக்கு தெரியாது. வள்ளியம்மாளுக்கும், சங்கரப்பாண்டியனுக்கும் திருமணமாகி சங்கரப்பாண்டியன் குழந்தை இல்லாமல் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. பின்னர் வள்ளியம்மாள் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சொத்து வள்ளியம்மாளின் சகோதரரான வேலுசேர்வை வாரிசு அடிப்படையில் பாத்தியப்பட்டு அனுபவம் செய்துவந்தார் என்றால் எனக்கு தெரியாது.

9. மேற்படி வேலு சேர்வைக்கு சங்கரப்பாண்டியன், ராக்கமுத்து, வள்ளியம்மாள், சுப்பையா சேர்வை வாரிசுகள் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி 4 நபர்கள் தான் வாய்மொழியாக பாகம் பிரித்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து ராக்கமுத்து, சங்கரபாண்டியன் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டு அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல. மேற்படி சங்கரப்பாண்டியன் இறந்துவிட்டார் என்றால் எனக்கு தெரியாது. மேற்படி சங்கரப்பாண்டியனுக்கு 1 முதல் 5 பிரதிவாதிகள் வாரிசு என்றால் எனக்கு தெரியாது.

10. வழக்கு சொத்தை ராக்கமுத்து, 1 முதல் 5 பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் தபசில் சொத்திற்கு வந்ததே கிடையாது. வழக்கு சொத்துக்களை ராக்கமுத்து, 1 முதல் 5 பிரதிவாதிகள், 6ம் பிரதிவாதிக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான், ஆனால் அதுபற்றி நேரடியாக தெரியாது, கொரனோ காலத்தில் விற்றுவிட்டார்கள்.

11. தற்போது கிரைய ஆவணத்தின் அடிப்படையில் 6ம்பிரதிவாதி பெயரில் தனிப்பட்டா உள்ளது என்றால் சரிதான். கிரைய ஆவணத்தின் அடிப்படையிலும், பட்டா அடிப்படையிலும் 6ம் பிரதிவாதிதான் தபசில் சொத்தை அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல.

12. வழக்கு சொத்தை 6ம் பிரதிவாதி கிரையம் வாங்கும்போது வழக்குசொத்து வள்ளியம்மாள் மூலம் அவரது வாரிசுகளுக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிடுவதற்கு பதிலாக அ.வ.எண்.446/2006

மற்றும் A.S.61/2010 என்ற தீர்ப்பாணையின் அடிப்படையில் பாத்தியப்பட்டது என்று தவறாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல, வேண்டுமென்றே மோசடியாக பெற்றுள்ளார்கள். மேற்படி தவறாக சொல்லியுள்ளதால் தபசில் சொத்து எனக்கு பாத்தியப்பட்டுவிடும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 6ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் உரிமையியல் பிரச்சனை இருப்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கில் நான் கேட்டுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

**குறுக்குவிசாரணை (7 முதல் 9 பிரதிவாதிகள் தரப்பில்)**

1. பிராதில் 7,8 பிரதிவாதிகள் மோசடியாக ஆவணங்களை பதிவு செய்துள்ளார்கள் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்துள்ளேன். அ.வ.எண்.446/2006 தீர்ப்பாணை கொண்டுதான் மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். 10,11 பிரதிவாதிகள் 7,8 பிரதிவாதிகளின் அலுவலகத்தில் என்ன பணி செய்கிறார் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அவர்கள் என்ன பணியில் பணி செய்கிறார்கள் என்று தெரியாமல் வம்பாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 8ம் பிரதிவாதி அ.வ.எண்.446/2006 தீர்ப்பாணை கொண்டுதான் ஆவணம் பதிவு செய்துள்ளார், சட்டமுரணற்ற வகையில் செய்யவில்லை என்றால் சரியல்ல. 10, 11 பிரதிவாதிகள் அரசு ஊழியர்கள் என்பதால் அவர்கள் அழுத்தத்தின்பேரில் பதிவு செய்யமுடியாது என்றால் சரியல்ல. எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.